IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 369 of 2023

Deposition of witness for

PW 1(LW1)

Name : Thiru. Balaji

Father's Name : BalaSubramaniyam

Age :M/50

Address : No. 13/24, Jeeva Nagar 1st Lane, Tondiarpet, Chennai – 81.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2024 .

---

**15.07.2024**

**PW1 முதல் விசாரணை**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ராஜி ஆஜர்

நான் கதவிலக்கம் எண். 13/24, ஜீவா நகர், தண்டையார்பேட்டை என்ற விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டுகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 07.01.2023-ம் தேதி இரவு 09.30 மணிக்கு மேல் என் மகளுக்கு அடிபட்டு இருப்பதாக என் மகளின் செல்போனில் இருந்து எனக்கு போன் வந்தது. தண்டையார்பேட்டை ஆர்த்தி ஸ்கேன் அருகே என் மகள் ரோட்டில் நடந்து போய் கொண்டிருந்தபோது மது அருந்திவிட்டு வேகமாக ஆஜர் எதிரி ஆட்டோ ஓட்டிவந்து என் மகளை இடித்து தரதரவென்று இழுத்து சென்றதாகவும், அதனால் என் மகளுக்கு அடிபட்டு கீழே விழுந்து கிடப்பதாக அங்கிருந்த பொது மக்கள் எனக்கு போன் செய்தார்கள். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் வருவதற்குள் அங்கிருந்த பொதுமக்கள் என் மகளை ஸ்ரீ மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். மருத்துவமனைக்கு சென்று நான் பார்த்த போது என் மகளுக்கு தலையின் பின்பக்கத்திலும், வலது காலிலும் , முதுகுபக்கமும் காயங்கள் இருந்தது. தனியார் மருத்துவமனை என்பதால் என்னால் அவ்வளவு செலவு செய்ய முடியாது என்று ஸ்டான்லி மருத்துவமனைக்கு என்

மகளை அழைத்து சென்றேன். அங்கே என் மகள் 3, 4 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டார். எதிரி ஓட்டி வந்த ஆட்டோவின் பதிவு எண். TN 03-X- 5063 ஆகும். இது சம்பந்தமாக நான் வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். அதில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆட்டோ தான் எதிரி சம்பவ தினத்தன்று ஓட்டி வந்த ஆட்டோ. அந்த ஆட்டோ சா.பொ.1 ஆகும். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> -

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை, போலீஸார் தான் எழுதினார்கள் அதனை படித்து காண்பித்தார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. புகாரில் போலீஸார் எழுதி அதனை படித்து காண்பித்து பின்பு நான் கையெழுத்து செய்தேன் என்ற வாசகங்கள் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு போனில் யார் தகவல் கொடுத்தார்கள் என்று பெயர் தெரியாது. பொதுமக்கள் போனில் தகவல் சொன்னார்கள். புகாரில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலீஸார் எழுதிக் கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு தகவல் சொன்னவர்கள் என் மகள் நடந்து செல்லும்போது எதிர் திசையில் ஆட்டோ வந்து இடித்து விட்டதாக சொன்னார்கள்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

15.07.2024

III Addl. Sessions Judge.
III Addl. Court.

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 369 of 2023

Deposition of witness for

PW2 (LW2)

Name : Selvi. Harini Sri

Father's Name : Balaji

Age :F/19

Address : No. 13/24, Jeeva Nagar 1st Lane, Tondiarpet, Chennai – 81.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2024 .

---

**15.07.2024**

**PW2 முதல் விசாரணை**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ராஜி ஆஜர்

நான் கதவிலக்கம் எண். 13/24, ஜீவா நகர், தண்டையார்பேட்டை என்ற விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் அ.சா.1 என் அப்பா. ஆஜர் எதிரியை தெரியும். 07.01.2023-ம் ஆண்டு இரவு 09.30 மணிக்கு நான் வேலை முடித்து தண்டையார்பேட்டை , டி.எச்.ரோடு வழியாக நான் நடந்து சென்று கொண்டிருந்த போது எதிரி ஓட்டி வந்த TN 03 -X- 5063 என்ற ஆட்டோ எதிரில் என் மீது மோதி என்னை தரதரவென்று இழுத்துச் சென்றது. அதனால் எனது தலையிலும், வலது காலிலும், முதுகிலும் காயங்கள் ஏற்பட்டது. அதனால் அங்கிருந்தவர்கள் என்னை ஸ்ரீ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சேர்த்தார்கள். அங்கிருந்தவர்கள் என்னுடைய போனை எடுத்து என் அப்பாவிற்கு தகவல் சொன்னார்கள். என் அப்பா ஸ்ரீ மருத்துவமனைக்கு வந்து என்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அதன் பிறகு என் அப்பா போலீசில் புகார் கொடுத்தார். ஒரு வாரம் நான்

மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டு இருந்தேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

சம்பவத்தின் போது நான் சென்னை, பெட்ஷாப் கடையில் வேலை செய்து வந்தேன். என் வேலை நேரம் மதியம் 02.00 மணிக்கு சென்று இரவு 09.30 மணிக்கு வீட்டிற்கு செல்வேன். விபத்து நடந்த பகுதி பொதுவாக பொதுமக்கள் அதிகம் செல்லக்கூடிய பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பாதசாரிகள் நடந்து செல்வதற்கான நடைமேடை உள்ளது என்றால் சரிதான். நான் நடைமேடையில் நடந்து போயிருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றால் அந்த இடத்தில் ட்ரைனேஜ் போகும் மூடி திறக்கப்பட்டிருந்ததால் நான் சாலையில் நடந்தேன். பொதுவாக சாலையில் செல்லும் போது முன்பும் பின்பும் வரும் வாகனங்களை நான் பார்த்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். எனக்கு முன்னாலும், பின்னாலும் என்ன வாகனம் வந்தது என்றால் ஞாபகமில்லை. எனக்கு எதிரே வேகமாக எதிரி ஓட்டி வந்த ஆட்டோ வந்தது. நான் எந்த பக்கம் செல்வது என்று தெரியாமல் நின்றிருந்தேன். எதிரி ஆட்டோ என்னை மோதிவிட்டு வேகமாக சென்று விட்டது. நான் தான் கவனக்குறைவாக வருகின்ற வாகனத்தை கவனிக்காமல் சாலையில் சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் நஷ்ட ஈடு பெறுவதற்காக எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

15.07.2024

III Addl. Sessions Judge.
III Addl. Court.

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 369 of 2023

Deposition of witness for

PW 3(LW3)

Name : Thiru. Ajay

Father's Name : Disosa

Age :M/20

Address : No. 205, C - Block HLL Nagar, Tsunami Quarters, Tondiarpet, Chennai – 81.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2024 .

---

**15.07.2024**

**PW3 முதல் விசாரணை**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ராஜி ஆஜர்

நான் கதவிலக்கம் எண். 205, சி -ப்ளாக் எச்.எல்.எல் நகர், சுனாமி குடியிருப்பு , தண்டையார்பேட்டை என்ற விலாசத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.2 ஹறிணி-ஐ தெரியும். 07.01.2023- ம் ஆண்டு இரவு 09.30 மணியளவில் தண்டையார்பேட்டை , டி.எச்.ரோடு அருகில் ஆர்த்தி ஸ்கேன் எதிரில் நான் வேலை முடித்து வந்து கொண்டிருந்த போது அ.சா.2 ஹறிணியை எதிரி ஓட்டி வந்த ஆட்டோவால் இடித்து விட்டார். அ.சா.2 ஆட்டோவின் அடியில் இருந்தார். அங்கே பொதுமக்கள் கூடிவிட்டார்கள். அ.சா.2-ஐ வேறொரு ஆட்டோவில் ஏற்றிவிட்டு ஸ்ரீ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் பைக்கில் மருத்துவமனைக்கு சென்றேன். அ.சா.2-ன் போனை எடுத்து அவரது அப்பாவிற்கு போன் செய்து தகவல் சொன்னேன். அ.சா.2 -ன் அப்பா மருத்துவமனைக்கு வந்தார். போலீஸார் என்னை

விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> -

இந்த விபத்து சம்பந்தமாக நான் போலீஸாருக்கு எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் அ.சா.2-ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அனுமதித்தேன். நான் சம்பவ இடத்திற்கு போய் பார்க்கும் போது அங்கே 6, 7 பேர் இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு கூட்டமாக இருந்ததாலும், சத்தம் கேட்டதாலும் போய் பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பகுதி வாகனங்கள் அதிகமாக வரக்கூடிய பகுதி என்றால் சரிதான். ஆட்டோ எங்கிருந்து வந்தது, விபத்துக்குள்ளானவர் எங்கிருந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்துக்குள்ளானவருக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

15.07.2024

III Addl. Sessions Judge.
III Addl. Court.